මැතිවරණ කොමිෂන් සභාව
தேர்தல் ஆணைக்குழு
Election Commission
මැතිවරණ මහලේකම් කාර්යාලය, නො.02 සරණ මාවත, රාජගිරිය, ශ්‍රී ලංකාව
தேர்தல்கள் செயலகம், இல.02 சரண மாவத்தை, இராஜகிரிய, இலங்கை
Elections Secretariat, No.02 Sarana Mawatha, Rajagiriya, Sri Lanka

මාධ්‍ය නිවේදනය
ஊடக அறிவித்தல்
MEDIA RELEASE

LAE\2023\ 53

2023.07.04

**2023.06.26 ஆம் திகதி ஒன்றுகூடிய தேர்தல் ஆணைக்குழு, பின்வரும் அறிவித்தல்களை வெளியிடுகின்றது:-**

2020 டிசம்பர் மாதம் 10 ஆம் திகதி நியமிக்கப்பட்ட இரண்டாவது தேர்தல் ஆணைக்குழு, சுமார் இரண்டு ஆண்டுகளும் 07 மாதங்களும் இயங்கியது. அரசியலமைப்பிற்கான இருபத்தோராம் திருத்தத்திற்கமைய அரசியலமைப்புச் சபையினால் புதியதோர் ஆணைக்குழு நியமிக்கப்பட்டதையடுத்து மேற்சொன்ன ஆணைக்குழுவின் பதவிக் காலம் நிறைவடையவுள்ளது.

அக்காலப்பகுதியினுள் சுதந்திரமானதும் நீதியானதும் அதிசிறப்பானதுமான தேர்தல் செயன்முறையொன்றை முன்னெடுப்பதற்கு தேர்தல் ஆணைக்குழுவினால் பல்வேறு மூலோபாயங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. பதினெட்டு வயதை எய்திய இளைஞர்களுக்கு அச்சந்தர்ப்பத்தில் இருந்தே வாக்களிக்கும் உரிமை கிடைக்கக்கூடியவாறு தேருநர் இடாப்பில் பெயரை உட்சேர்ப்பதற்கு தேருநர்களைப் பதிவுசெய்தல் சட்டத்தில் திருத்தம் கொண்டுவருதலும், தேர்தல் பிரச்சார செலவினங்களைக் கட்டுப்படுத்தும் பொருட்டு பாராளுமன்றத்தில் சட்டமொன்றை நிறைவேற்றிக்கொள்வதும் அதன் மூலம் அடையப்பெற்ற பெறுபேறுகளாகும். அதற்கான பாராட்டுக்கள், பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து அரசியற் கட்சிகளுக்கும் உரித்தாகும். அதேபோல் முற்கூட்டியே வாக்களிக்கும் முறைமை, வேட்பாளர்களுக்கும் மக்கள் பிரதிநிதிகளுக்கும் சட்டத்தினால் செயல்வலுவூட்டப்பட்ட ஒழுக்கநெறிக் கோவையொன்றை வெளியிடுதல், வாக்கெடுப்பொன்று நடைபெறும் சந்தர்ப்பத்தில் அனைத்து ஊடகங்களையும் கண்காணிப்புக்கு உட்படுத்தல் முதலிய ஜனநாயக தேர்தல் சட்டத் திருத்தங்களுக்கான சட்ட வரைவுகளை கொண்டுவரும் சந்தர்ப்பம் வரை முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இவ்வனைத்துக் கருமங்களையும் தேர்தல் ஆணைக்குழுவின் கூட்டுச் செயற்பாட்டின் மூலம் அடைந்துகொள்ளக்கூடியதாக இருந்தது. அதற்கு தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் உள்ளிட்ட தேர்தல் ஆணைக்குழுவின் தலைமை அலுவலகத்தின் அனைத்து பணியாட்குழுவினரிடமிருந்தும் மாவட்டங்களின் பிரதி/உதவி தேர்தல்கள் ஆணையாளர்களிடமிருந்தும் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்களிடமிருந்தும் சட்டமா அதிபர் திணைக்களம், அமைச்சுக்கள் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களிடமிருந்தும் நியதிச்சட்ட சபைகளிடமிருந்தும் கிடைத்த ஒத்தாசை பெரிதும் போற்றப்பட வேண்டும். அதேபோல் தேர்தல் ஆணைக்குழுவின் பங்காண்மை அமைப்புக்களான அனைத்து அரசியற் கட்சிகள், தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்கள், சிவில் அமைப்புக்கள், ஊடக நிறுவனங்கள் மற்றும் ஊடகவியலாளர்கள், மகளிர், இளைஞர் மற்றும் வலிமையிழந்தோர் அமைப்புக்களிலிருந்தும் கிடைத்த ஒத்தாசை எமக்குக் கிடைத்திருக்காவிடில், இப்பணிகளை நிறைவேற்றிக்கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டிருக்காது. அதேபோல் தேர்தல் முறைமைகளுக்கான சர்வதேச மன்றம் (IFES) வழங்கிய தொழில்நுட்ப ரீதியான ஒத்துழைப்பு அளப்பரியதாகும். இச்சந்தர்ப்பத்தில் அவர்கள் அனைவருக்கும் தேர்தல் ஆணைக்குழுவின் நன்றியறிதலையும் கௌரவத்தையும் தெரிவிக்க விரும்புகின்றோம்.

தேர்தல் ஆணைக்குழுவின் ஆணைப்படி,

**சமன் ஸ்ரீ ரத்நாயக்க**
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்